தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
Website: www.tnlbo.tn.gov.in
முன்னிலை : திரு மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

முறையீட்டு மனு எண். 185/மா/2024,
நாள் 18.12.2024

திரு மா. சிவராஜ், சென்னை. .................. முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர், ................. எதிர் மனுதாரர்
மண்டலம் 10,
பெரு நகர சென்னை மாநகராட்சி.

சென்னை, கோடம்பாக்கம், வரதராஜாபேட்டை மெயின் ரோடு, கதவு எண்.8 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.மா.சிவராஜ் என்பவரின் 11.09.2024 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் 11.09.2024 அன்று பெறப்பட்டு, 185/மா/2024, என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை, கோடம்பாக்கம், வரதராஜாபேட்டை மெயின் ரோடு, கதவு எண்.8 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.மா.சிவராஜ் என்பவர் 11.09.2024 நாளிட்ட தனது மனுவில் கீழ்க்கண்டவாறு புகார்களை தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட முகவரியில் வசிக்கும் நான், சமூக செயல்பாட்டாளர் ஆவேன். சென்னை 83, அசோக் நகர், 4வது அவின்யூ, கதவு எண்.37/5 என்ற இடத்தில், தரைதளத்தில் இருபுறங்களில் வணிக வளாக கட்டிடங்களும், அதற்கு மேல் அடுக்குமாடிகளில் மூன்று தளங்களில் வீடுகள் உள்ளன. இக்கட்டிடத்தின் இருபுறங்களிலும், மாநகராட்சிக்கு சொந்தமான மழைநீர் கால்வாய் மற்றும் நடைபாதையை ஆக்கிரமித்து இரும்பு தகர கூடாரங்கள், விளம்பர பலகைகள் அமைத்துள்ளதால், அருகில் உள்ள பள்ளிக்கு செல்லும் மாணவ, மாணவியர்கள் நடைபாதையை பயன்படுத்த முடியாமல், தெருவின் நடுவே நடப்பதால், விபத்துகள் ஏற்படுகின்றன. எனவே, மேற்கண்ட ஆக்கிரமிப்பினை அகற்றிடவும், உரிமையாளருக்கு அபராதம் விதிக்குமாறும் இம்முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

2. இம் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 14.10.2024 நாளிட்ட அறிவிக்கை மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10–ன் மண்டல அலுவலரிடமிருந்து அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. இம் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 05.12.2024 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 27.11.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. மனுதாரர் 05.12.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

“சென்னை, அசோக் நகர், 4வது அவின்யூ, கதவு எண். 37/5 என்ற முகவரியில் தரைதளத்தில் இருபுறங்களிலும், வணிக வளாக கட்டிடங்களும், அதற்கு மேல் மூன்று தளங்களில் வீடுகளும் கட்டப்பட்டு உள்ளன. இக்கட்டிடத்தின் இருபுறங்களிலும், மாநகராட்சிக்கு சொந்தமான மழைநீர் கால்வாய் மற்றும் நடைபாதையை ஆக்கிரமித்து இரும்பு தகர கூடாரங்கள், மற்றும் விளம்பர பலகைகள் அமைத்துள்ளதால் அருகில் உள்ள பள்ளியில் படிக்கும் மாணவர் / மாணவிகள் நடைபாதையில் நடந்து செல்ல முடியாமல் அவதிப்படுகிறார்கள். இது குறித்து புகார் மனு இரண்டு வருடங்களாக அளித்தும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் அலுவலர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, மேற்கண்ட நடைபாதை மற்றும் மழைநீர் கால்வாயை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள படிக்கட்டுகளை அகற்றிடவும், உரிய நடவடிக்கை எடுக்குமாறும், இம்முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்``.

5. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10–ன் உதவிப்பொறியாளர் 05.12.2024 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

“மனுதாரர் திரு.சிவராஜ், சமூக ஆர்வலர், அவர்களின் புகாரின் அடிப்படையில் 4வது அவென்யூவில் கள ஆய்வு செய்தபொழுது அவ்விடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகள் temporary ஆக்கிரமிப்பு ஆகும். எனவே அந்த temporary ஆக்கிரமிப்புகளை அக்கடைகாரர்களிடம் தெரிவித்து அகற்றி வருகின்றோம். மேலும் 04.12.2024 அன்று அந்த temporary ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டது என்று தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் தொடர் கண்காணிப்பு செய்யப்பட்டு ஆக்கிரமிப்பு இருப்பின், அவற்றை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று இம்முறை மன்றத்தின் முன் தெரிவித்து கொள்கிறேன்``.

6. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10–ன் உதவிப்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர் தான் ஒரு சமூக செயல்பாட்டாளர் என்றும், சென்னை 83, அசோக் நகர், 4வது அவின்யூ, கதவு எண்.37/5 என்ற இடத்தில் தரைதளத்தில் இருபுறங்களில் வணிக வளாக கட்டிடங்களும், அதற்கு மேல் அடுக்குமாடிகளில் மூன்று தளங்களில் வீடுகள் உள்ளன என்றும், இக்கட்டிடத்தின் இருபுறங்களிலும், மாநகராட்சிக்கு சொந்தமான மழைநீர் கால்வாய் மற்றும் நடைபாதையை ஆக்கிரமித்து இரும்பு தகர கூடாரங்கள், விளம்பர பலகைகள் அமைத்துள்ளதால், அருகில் உள்ள பள்ளிக்கு செல்லும் மாணவ, மாணவியர்கள் நடைபாதையை பயன்படுத்த முடியாமல், தெருவின் நடுவே நடப்பதால், விபத்துகள் ஏற்படுகின்றது என்றும் எனவே, மேற்கண்ட ஆக்கிரமிப்பினை அகற்றியும், உரிமையாளருக்கு அபராதம் விதிக்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள சென்னை, அசோக் நகர், 4வது அவென்யூவில் உள்ள ஆக்கிரமிப்புகள் தற்காலிகமானது என்றும், அத்தகைய ஆக்கிரமிப்புகளை கடை உரிமையாளர்களிடம் கூறி ஆக்கிரமிப்புகளை அகற்றி வருவதாகவும், மேலும் அத்தகைய ஆக்கிரமிப்புகள் 04.12.2024 அன்று அகற்றப்பட்டது என்பதும், அப்பகுதியில் தொடர் கண்காணிப்பு செய்யப்பட்டு ஆக்கிரமிப்பு செய்து இருப்பின் அவற்றை அகற்றி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10–ன் உதவிப்பொறியாளரின் வாக்குமூலத்தின் மூலம் அறிய முடிகிறது.

7. இந்நேர்வில் சென்னை அசோக் நகர், 4வது அவென்யூவில் உள்ள ஆக்கிரமிப்புகள் தற்காலிகமானது என்றும், அந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டது என்று தெரிவித்து இருந்தாலும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் உதவிப்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் உறுதி அளித்தவாறு, தொடர் கண்காணிப்பு மற்றும் கள ஆய்வு மேற்கொண்டு அப்பகுதியில் ஆக்கிரமிப்புகள் ஏற்படாவண்ணம் இருக்க உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மூன்று மாதங்களுக்கு பின்னர், அவ்விடத்தில் ஆய்வு மேற்கொண்டு ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை என்பதை உறுதி செய்து அது குறித்து அறிக்கையினை இம்முறைமன்றத்திற்கு அனுப்பிவைக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2024-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 18–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்,

1) திரு.சிவராஜ்,
த/பெ.மாதவராஜ்,
8, வரதராஜாபேட்டை மெயின் ரோடு,
கோடம்பாக்கம்,
சென்னை–600 024.

2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை 600 003.

3) மண்டல அலுவலர்,
மண்டலம் 10,
பெருநகர சென்னை மாநகராட்சி,
64, NSK சாலை, கோடம்பாக்கம்,
சென்னை–24.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75 சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 28.

5) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75 சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 28.

<u>நகல்:</u> மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ / உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).